1981 மார்ச் 7]

இருக்கின்ற பிரச்னை. படிப்படியாக இப்பொழுது கிட்டத் தட்ட மூன்றில் இரண்டு பங்கு 2/3rds have been regularised ரெகுலரைஸ் செய்து விட்டோம். எல்லோரையும் ரெகுலரைஸ் செய்யக்கூடிய அந்தக் குறிப்புகளை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

சித்த மருத்துவர்களைப் பதிவு செய்தல்.

*வினா எண். 428.—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு இந்திய மருத்துவ கழகத்தின் ஆர். ஐ. எம். பி. (R.I.M.P.) பதவிக்காக 1978 ஆம் ஆண்டில் தேர்வு எழுதிய சித்த மருத்துவர்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இக்குறையை நீக்க அரசு உடனடி நட வடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவ ரவர்களே, 1978 ஆம் ஆண்டில் தேர்வு எழுதி இரண்டாண்டுக் காலமாகியும் கூட இவர்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதற்கு ஏதாவது சட்டச் சிக்கல் உள்ளதா ? அப்படிச் சட்டச் சிக்கல் இருந்தால் அது மத்திய அரசு மட்டத்தில் இருக்கிறதா அல்லது இந்த அரசு மட்டத்தில் இருக்கிறதா ? தாமதத்திற்கான காரணம் இருக்கிறதா என்பதை அரசு அறி விக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே சில பேர் எழுதினார்கள். அடிப்படையான மார்க்குகள் கிடைக்கவில்லை என்று மீண்டும் ஒரு முறை 18-6-1978இல் இரண்டாவது வாய்ப்பு அளிக்கப் பட்டது. Section 17 of the India Medicines Council Central Act of 1970 imposes certain restrictions for registering practitioners of I dia Medicine. This was brought into force in1976 through Central Act. Only according to the Indian Medicines Council Central Act, those possessing prescribed qualifications can be registered in the Central register or State register. Those who do not possess the prescribed qualification cannot be registered after 1—10—1976.

However, written test has already been held. அதையும் ஏற்கனவே 1978 ஆம் ஆண்டு நடத்தியிருப்பதால் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நாம் அவர்களைக் கேட்டு Change the date of enforcement. Section 17 retrospective effect இல்லாமல் மாற்றியமைக்க முடியுமா என்பது பற்றி மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். நல்ல பதிலை மத்திய அரசு உடனடியாகத் தரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சித்த மருத்துவ முறை என்பது நம்முடைய தமிழகத்திற்கே உரிய முறை. தமிழ் மாணவர்கள் தமிழ் மருத்துவ முறைக்குத் தேர்வு எழுதியிருக்கிறார்கள். இதற்கு அங்கீகாரம் மத்திய அரசிலிருந்து வர வேண்டுமென்ற முறையை மாற்றித் தமிழக அரசே இதற்கு அங்கீகாரம் கொடுத்துப் பதிவு செய்யும் அதிகாரத்தைப் பெறுவதற்கான முயற்சியை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்கே பிரச்னை வருகிறது என்றால்,

Indian Medicines Council Central Act 1970 என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதில் எல்லா வற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'whether it is possible to take it away from the Central Act and delink it form the Central Act, that is the point on which we have to make a detailed examination.

அரசு காச நோய் மருத்துவமனை, திருவண்ணாமலை.

*வினா எண். 429.—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலையில் உள்ள அரசு காசநோய் (மார்பு) மருத்துவமனையில் உள்ள படுக்கைகளை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அந்த திட்டம் செயல்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS